அநுபவ வைத்தியம்.

1990

6/92

305 verified

டாக். D.C. ஜெயராஜ்

Please verify

305. அநுபவ வைத்தியம்

31.1.90

D.v. D.C ஜெயராஜ்

305. அனுபவ வைத்தியம்

305. அநுபவ வைத்தியம்

ஏடு எண் : 305

பெயர் : அநுபவ வைத்தியம்

அளவு : 32.5 x 2.7

வரி : 10

ஏடு எண்ணிக்கை : 120 + 26 = 146

பாடல் : உரைநடை

சுவடி நன்றாக உள்ளது.

எடுத்த தேதி : 2.1.90

முடித்த தேதி : 31.1.90

எழுதியவர் : தி. லெட்சுமி

பக்கங்கள் : 200

உ

# 305. அநுபவ வைத்தியம்

ஏடுஎண் : 305

பெயர் : அநுபவவைத்தியம் (மருந்து முறை)

அளவு : 32.5 x 2.7

வரி : 10

ஏடுகளின் எண்ணிக்கை : 120 + 26 = 146

பாடல் : உரைநடை

சுவடி நன்றாக உள்ளது.

எடுத்த தேதி : 2.1.90

முடித்த தேதி : 31.1.90

மொத்த பக்கங்கள் : 200

படியெடுத்தவர் : தி. லெட்சுமி.

[illegible]

17/4/90

பொருளடக்கம் பக்கம்

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|

பொருள் அடக்கம் | பக்கம்

## 305. அநுபவ வைத்தியம் - கைமுறை

### அஸ்திசுரத்துக்கு பாளியாரை நெய்

1அ

நன்னாரிவேர், வட்டத்திருப்பி வேர், சுண்டவேர், நல்லவபத்திரிவேர், மாதளை பஞ்சகம் கோரைக்கிழங்கு, இலந்தப்பட்டை, மாங்கொட்டை நாதை, இலவம்பிசின், நாவல்பிசின், நாடத்திரவேர், இதுவெல்லாம் பொடித்து குடிநீர்த்தண்ணீர் விட்டு இருநாழியாக காய்ச்சி நெய் நாழிவிட்டு பாளியாரை சாறு இருநாழிவிட்டு கஞ்சாங்கோரை சாறு நாழி நெய்யாலே விட்டு கற்கம் சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிமதுரம், சீரகம், ஏலந் திப்பலி, பெருமரப்பட்டை, குடசப்பாலைப்பட்டை, ஏலம், கோஷ்டம், புளியங்கொட்டை, இலவங்கப்பட்டை, இதுவெல்லாம் அரைத்து கரைத்துப் பதத்தில் வடித்து கொட்டளவு அந்திசந்தி கொள்ள பத்தியம் புளிப்பு, உப்பு தள்ளவும்

இதுக்கு தீரும் வியாதி :

கிராணி, அதிசாரம், வயிறுகடுப்பு அஸ்திசுரத்துக்கு மேலெழுந்த கடுப்பு தீரும்.

இது கைகண்டது.

அடபாள லேகியம்

அட்டதிருப்பாவேர், அறுகம்
பட்டை, தொருவேலிவேர், மூக்கா வேளைவேர்,
சாறணைவேர் கருவேப்பயிலை தண்டு பெருமர
பட்டை வேளைவேர் வகைக்கு பலம் 10, உள்ளி
பூண்டு பலம் 10, இதுவெல்லாம் நறுக்கி இடித்து
காற நாழி தண்ணீர் முக்குறுணி நாழியிட்டு
நாழியென்றாய்க் காச்சி கொண்டு இதுக்கு
திரித்திராயம் சுக்கு மிளகு திப்பிலி ...ய
அச்சாரம் பெருங்காயம், சீரகம், கருஞ்சீரகம்
ஓமம் வகைக்கு பலம் 2, சக்கு பலம் 10, கல்உப்பு
பலம் 16, கடுக்காய் 100 இது எல்லாம் இடித்து
2 அவல்த்திரகாயம் பண்ணி முன் கியாழத்தில் இட்டு
கிளறி பதம் வருகிற சமயத்திலே பசுவின் வெண்ணெ
நாழி பசுவின் நெய் நாழியிட்டு கிளறி இறக்கி
ஆறின பிறகு தேன் நாழியிட்டுக் கிளறி வைத்து
கொண்டு தழுக்கொட்டை பிரமாணம் ரெண்டு
காலமே சாப்பிடவும்.
இதுக்கு தீரும் வியாதி:
வயறு பொருமல், எரிச்சல்
கடுச்சல் கிராணி சூலை அக்னி மாந்தியம்
வாய்வு இது வெள்ள குணமாம்.
பத்தியம்: கசப்பு புளிப்பு தவிர்க்கவும்
பசுவின் மோர் உட்கொள்ளவும்.

## மகாரச் சூரணம்

அட்டத்திருப்பலவேர், காயவேளைவேர்,
வெள்ளசாரணைவேர், காட்டுமல்லிகைவேர்,
வெண்ணொச்சிவேர் சிறுகாஞ்சொறிவேர், முருக்கம்
வேர், பெருமணக்கம் வேர், மாதன்னடை கறணை (கருணை)
ஆகிழங்கு, வெருகங் கிழங்கு வகைக்கு பலம் 1, சுக்கு
திப்பலி, சித்திரமூலம், கண்டுமூலம், செவ்வியம்,
கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி வசம்பு
ஓமம் மரமஞ்சள், கோரைவேர், ஆனைத்திப்பலி,
அதிமதுரம், நிலவேம்பு சீரகம், கருஞ்சீரகம்,
குராசாணி, ஓமம், மூளமஞ்சள், எவ்வச்சாரம்
நவச்சாரம், சத்திச்சாரம், இந்துப்பு, கல்லுப்பு
பொட்டளையுப்பு வளையலுப்பு சவுட்டுமண்
இது வகைக்கு பலம் 1 முன்சொன்ன யெட்டு வகையும்
இடை மருந்தும் காய போட்டு இடித்துச் சூரண
பண்ணி இதுயுடனே பெருங்காயம் ஒரு பலம் கூட
சேர்த்துக் கொண்டு பாத்திரத்திலே வைத்துக்கொண்டு
சாப்பிடவும்.

இதுக்கு தீரும் வியாதி:

குன்மவலி, இரைச்சல், கழிச்சல்,
அசீரணம், நெஞ்சொப்பு மாந்தே (மாந்திகம்) இதுவெல்லாம்
குணமாம் சகல வாயுவும் குணமாம்.

## திரிசை வடகம்

3அ சாதிக்காய் பலம் 1, சாதி
பத்திரி பலம் 1, கிராம்பு பலம் 1, நாகசம்பத்திரி பலம் 1,

மிளகு பலம் 1, செவ்வியம் பலம் 1, சித்திர மூலம் பலம் 1,
திப்பலி பலம் 2, திப்பிலி மூலம் பலம் 2, சுக்கு பலம் 3
லாமிச்சம் வேர் அரைகளஞ்சி 3, ஏலம் அரைகளஞ்சி 3
இலவங்கப்பட்டை அரைகளஞ்சி 3, இலவங்கபத்திரி
அரைகளஞ்சி 3, சிறுநாகப்பூ அரைகளஞ்சி 3,
கடுக்காய் பலம் 1 இதுவெல்லாம் இடித்து வஸ்திர
காயம் பண்ணி ராயபுர சர்க்கரை பலம் 25
சட்டியில் கரைத்து குழம்பாக காய்ச்சி பாகு பதமான
பிறகு சூரணத்தை போட்டு கிளறி பதத்திலே
எடுத்து அடையாக தட்டி ஆறின பிறகு இரு
துட்டெடை பிரமாணம் அந்தி சந்தி இரண்டு
நேரமும் கொள்ளவும்.

இதுக்கு தீரும் வியாதி :
சயசுரம், அக்கினி மாந்தியம், (மாந்தம்)
இருமிரைப்பு, அரோசிகம், வாந்தி இதுவெல்லாம்
தீரும்.

## கற்பூராதி சூரணம்

ஆ ஆலாத்தி கற்பூரம் பலம் ௫
கற்பூர வள்ளியிலைச் சாறு இருநாழி கற்பூரத்தை
ஆல கரண்டியிலே போட்டு சிறுக சிறுக சாற்றை
விட்டு சுருங்கல் (சுருக்கு) குடுத்த பிறகு எடுத்து வெண்காரம்
அரைகளஞ்சி 4 பொரிச்சு இட்டு கொண்டு
அத்தோட (அத்துடன்) திப்பிலி அரைகளஞ்சி இடித்து பொடி
பண்ணி வெண்காரத்தையும் பொடி பண்ணி போட்டு
கற்பூரத்தையும் பொடி பண்ணி போட்டு வைத்து
கொண்டு தேனோடே (தேனுடன்) அரை அரைகளஞ்சி இட்டு
கொண்டு சாப்பிடவும்

இதுக்கு தீரும் ஆயோதி:

சுவாசகாசம், சிலேற்பனம், க்ஷயரோகம், மாரடைப்பு இவையெல்லாந் தீரும்

திக்குலாதிசூரணம்

திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, வட்டத் திருப்பி வேர், ஏலம் இலவங்கம் வெட்பாலையரிசி, பெருங்காயம், சிறுதேக்கு, வசம்பு, அதிவிடையம், சாதிக்காய், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம் அரேணுகம், ஆனைத்திப்பிலி, அசமதாகம், கோரோசனை, ஓமம், தாளிசபத்திரி, இந்துப்பு, சாறணைக்கிழங்கு கடுக்காய் நெல்லிமுள்ளி தான்றிக்காய் குக்குலுமுக்காவெள்ள மருத தேவதாரம் சடாமாஞ்சில் கற்கடகசிங்கி, தேக்கு, நீர்முள்ளி செங்கத்தாரிபட்டை, சங்கம்வேர், வெள்ளறுகு கருவேப்பம்பட்டை, மாகாறணைபட்டை, குடசப்பாலை படை ஈசுவாவேர், அக்கனாத்திபட்டை, மடபத்திரி வேர், பெரும்பட பத்திரிவேர், ஆகாசகெருடன் கிழங்கு, சிவனார்வேம்பு, நொச்சிவேர் உளைக்கி பலம் 1, குக்கிலியம் பலம் 2, பரங்கிபட்டை பலம் 3 இதுவெல்லாம் வஸ்திரகாயம் பண்ணிக்கொண்டு வெருகதர பிரமாணம் அந்தி சந்தி தேனோடே கொள்ளவும்.

இதுக்கு தீரும் ஆயோதி:

மண்டைகரப்பன், குட்டம்ரோகம், பித்தசயரோகம், பீருமல் சிரைப்பு ஆறாத புண்ணுகள்

ஆ மேகசூலை கிரந்தி சூலை வெகுத்த சூரணம் வாத
சூலை கிரந்தி மேகம் வியாதியாதெல்லாம் தீரும்
பத்தியம் கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

கருங்கோழி சூரணம்

சுக்கு, திப்பிலி, மிளகு,
திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம் கருஞ்சீரகம்
குரோசாணி ஓமம் செங்கத்தாரிபட்டை, வாய்விளங்கம்
கொத்தமல்லி, கஸ்தூரி மஞ்சள், காரபோகவரிசி
ஓமம் சதகுப்பை நீரடிமுத்து, வெப்பாலையரிசி,
சீரகம் தாளிசபத்திரி, சாதிக்காய் சாதிபத்திரி,
கிராம்பு, கடுக்காய், தான்றிக்காய், இது வகைக்கு
பலம் ௫ பறங்கிப்பட்டை பலம் 10 அரத்தைபலம் 2
அமுக்கராகிளங்கு ௫, எட்டிக்கொட்டை ௬, கருங்
கோழி கொண்டு வந்து தலையும் காலும் குடலும்
வாங்கி போட்டு மருந்தை எல்லாம் அதிலே
அடைச்சு சதுரகள்ளி கொண்டு வந்து நறுக்கி
பானையில் போட்டு தண்ணீர் விட்டு பானை
5. மூடிகட்டி அதிலே குத்த மருந்தை அடைத்த
கோழியை வைத்து கட்டி கொண்டு சிறுட மண்ணு
செய்து வந்த பிறகு எடுத்து உரலிலே போட்டு
இடிச்சு மான் தோலிலே போட்டு வஸ்திர
காயம் பண்ணி மூவிரல் கொண்டது அந்தி சந்தி
வெந்நீர் தேனாவது சாப்பிடவும்.

இதுக்கு தீரும் வியாதி:- கரப்பமேக வாயுவு மேககுஷ்
மேகத்தின் மேலெடுத்த சூரணம், சிகாகாரணி சூலையால்
கடுப்புகள் இது எல்லாம் தீரும். பத்தியம் கைப்பு, புளிப்பு
தவிர்க்கவும்.

## கருங்கோழி சூரணம்

பரங்கிப்பட்டை பலம் 10,
செள்ளவெங்காயம் பலம் 5, மிளகு பலம் 2 மஞ்சள் பலம் 2, கார்போகரிசி பலம் 1, ஓமம் பலம் 1, சதகுப்பை பலம் 1, நீரட்டிமுத்து பலம் 1, செங்கத்தரி பட்டை பலம் 5 கருஞ்சீரகம் பலம் ரு தாளிசபத்திரி பலம் ரு, வாய் வாளங்கம் பலம் ரு, கொத்தமல்லி பலம் ரு, குரோசாணி, ஓமம் பலம் ரு, வெப்பாலை அரிசி பலம் ரு, நற்சீரகம் பலம் ரு இவையெல்லாம் ஆகருங்கோழி கொண்டு வந்து உசிரோ இறகு மாறுகிப் போட்டு குடல் போக்கி போட்டு அதிலே இந்த மருந்தை அடச்சு கட்டி சத்திரகள்ளி ஒரு பானையிலே ரொம்ப அடைச்சு நிறைய தண்ணீர் விட்டு ஒரு சாமம் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து ஒரு சாமம் வேக வைத்து எடுத்து அந்திசந்தி முறை வரல் கொண்டது போம்

தீரும் வியாதி:-
கிராந்தி சூலை, மாரயம் கபகை இது வெல்லாம் போம். பத்தியம் கைப்பு புளிப்பு தள்ளவும். நல்லெண்ணை முழுகுதைது பெருந்த சிலமதுட வாம் இப்படி இருபது நாள் கொள்ள குணமாம்.

## வெண்பை வாட்டி

உள்ளி பலம் 100, உரிச்சு அரைத்துக் கொண்டு சுக்கு சுக்கு மிளகு, திப்பிலி பெருங்காயம் வெவ்வச்சாரம் நவச்சாரம் சீனக்காரம் சீரகம் கோஷ்டம் சதகுப்பை

ஓமம், கொத்தமல்லி, இந்துப்பு, கல்லுப்பு, பொட்டலுப்பு (பொட்டிலுப்பு)
வளையலுப்பு, நல்ல உப்பு, எள்ளு கடுகு இவை
ஒவ்வொன்று பலம் 1, பொடி பண்ணி ஒரு சட்டியில்
போட்டு முன் சொன்ன மருந்து போட்டு ஊறக்
கொண்ணை குத்தி (ஊற்றி) கிளறி மெழுகு பதத்திலிறக்கி
காலமே ஒரு கொட்டை பாக்களவு கொள்ளவும்

தீரும் வியாதி :.

சர்வாங்க வாதமும், ரத்த கிராணி
அஸ்தி சுரமும், சுவாச காசமும், கைகால் கடுப்பு,
தலைவலி, இவை தீரும். பத்தியம் கைப்பு புளிப்பு
ஆகாது

## திரிபலையாதி ரசாயனம்

திரிபலை பலம் 16, சர்க்கரை பலம் ௫
வாலுகம், சுக்கு, சிறுதேக்கு, சீரகம், மிளகு இவை
வகைக்கு பலம் 4, திரிபலை மூலம் பலம் 2, கையாந்
தரை பொடி பலம் 1, ஏலம், இலவங்கப்பட்டை
இலவங்கபத்திரி, கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிமுள்ளி, சாதிக்காய், தக்கோலம் இது
ஒவ்வொன்று பலம் 1 சூரணம் பண்ணி பதினாறு
பலம் தேனுடன் கலந்து பத்து நாள் தானிய
புடத்தில் வைத்து கொட்டை பாக்களவு சாப்பிடவும்
தீரும் வியாதி :.

காச சுவாசம், உடம்பு உலர்ந்து போகுது
சந்தி, அருசிலம், பாண்டு ரோகம், வாதசுரம்
அஸ்தியில் பாதசந்தசுரம் இவையெல்லாம் தீரும்

## கண்டத்திரகம்

ஆ

இஞ்சி மெல்லிய தோல் போக்கி சிறுக கடலை போலே நறுக்கி பசுவின் நெய் வார்த்து பொன்னிறமாக வறுத்து பதினாறு பலம் நிறுத்துக் கொண்டு நெய் நாலு கட்டு வேகிற பக்குவத்தில் கடை மருந்து மிளகு வராகனெடை 12 திப்பிலி வராகனெடை 8, திப்பிலி மூலம் வராகனெடை 4 உக்ந்று பலம் 1, சாதிக்காய் பலம் 1, லவங்கம் பலம் 1, சுக்கு பலம் 1, கொடிவேலி வேர் பட்டை வராகனெடை 20, இவை சூரணம் பண்ணி நெய்யும் இஞ்சியும் கொதிக்கிற பக்குவத்தில் தூவி பின்பு பதினாறு பலம் சர்க்கரை கூட்டி போட்டு லேகிய பக்குவத்திலிறக்கி அந்தி சந்தி கொட்டை பாக்களவு கொள்ளவும்

தீரும் வியாதி :- அஜீரணம் போம், தீபனமுண்டு சத்தி, அருசி மலவடைப்பு, சகல பயித்தியமும் சிலேற்பனமும் தீரும்.

## கண்டங்கத்திரி லேகியம்

7அ

கண்டங்கத்திரி வேர் பலம் 100, தசமூலம் பலம் 50, செவ்வியம் பலம் 50, சாறணை வேர், சங்கம் வேர் ஆடாதொடை வேர் திப்பலி மூலம் கையாந்தகரை மாவிலங்கை வேர், கொடிவேலி வேர் கீழா நெல்லி சமூலம் பெருங்கும்பால் வேர் நொச்சில் வேர் இவை ஒவ்வொன்று பலம் 10

ஆகபலம் மூன்றாகும் தூத்து தண்ணீர் இருகல்லே
பதக்கு விட்டு எட்டிலொன்றாய் காச்சி வடிந்து
வடித்துக் கொண்டு பழ வெல்லம் பலம் 100 காச்சி
அருகிற போது ஆடாதொடையாலை கையாந்த
கரையாலை, கிழாநெல்லி, கண்டங்கத்திரியாலை,
பாரமிச் சூண்டு தூதுவளையாலை. இஞ்சி இவ்
வொன்றுக்கு சாறு முன்னாழி பசுவின் நெய்
நாழி கூட கலந்து காச்சி அதிர சமான் பக்குவத்தி
கடை மருந்து திரிபாலா பலம் 20, ஏலம் இலவங்க
பட்டை இலவங் கபத்திரி சுக்கு சிறுதேக்கு
ஆகிறவை அஞ்சும் இவ்வொன்று பலம் 4 சாதிக்காய்
பலம் 3, வாய்விளங்கம் பலம் 3 கிராம்பு பலம் 3
பெருங்காயம் பலம் 3 எரு அரப்பொடி பலம் 4
இரும்பு அரப் பொடி பலம் 2 இதுவெல்லாம் சூரணம்
பண்ணி சேர்க்கையதத்தில் தூவி துழாவி இறக்கி
ஆற விட்டு தேன் நாழிவிட்டு காலமே புன்னைக்
காயளவு கொள்ளவும்.

தீரும் வியாதி :

அந்திசந்தி அஞ்சு வகை சுவாசமும்
சுவாச காசம், சய ரோகம், சம்பந்தப்பட்ட இருமல்
பதினொரு வகை மல(ஜ)வல மாலைக்கட்டிப்புகள்
குன்மம் பிளவை உதர வாய்வு, கிராணி அட்ட
வகை அருசி அக்கினி மாந்தியம் சம்பந்தப்பட்ட
வியாதியெல்லாம் தீரும். இந்த ஔஷத மகாதேவர்
காலாலே பண்ணி பட்டத்துக்கு ஔஷதமகா
ரோகங்களெல்லாம் குணமாகும்.

3.1.90

## கெந்தக ரசாயனம்

கெந்தகம் பலம் 6, சுத்தி பண்ணி கொண்டு கடுக்காய், தான்றிக்காய் நெல்லிமுள்ளி ஏலம் இலவங்கம் சுக்கு மிளகு திப்பிலி இவை ஒவ்வொன்று வராகனிடை 6 சித்திரமூலம் பலம் 1 சூரணம் பண்ணி கெந்தத்துடனே கூட கலந்து ஒரு வராகனிடை அந்தி சந்தி தேனோடேயாகுதல் சர்க்கரையோடேயாகுதல் கொள்ளவும்.

தீரும் வியாதி !.

மூத்திர ரோகம் எட்டு வகை குட்டமும் நாலு வகை கிராணியும் மந்தாக்கினியும் பாலகிரகமும் எட்டு வகை குன்மமும் காந்தி ரோகமுந் தீரும் கை கண்டது.

## அமிர்த சர்க்கரை

சர்க்கரை பலம் 10, கிந்தில் சர்க்கரை பலம் 20, விலாமிச்சம் வேர், சீரகம், கோஷ்டம் நெல்லிமுள்ளி நிலப்பனை கிழங்கு, ஏலம், அதிமதுரம், அரேணுகம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், சிறுநாகப்பூ, தாமரை வளையம், தாமரைக்கேசரம், சந்தனம், கிராம்பு, சுக்கு, நெற்பொரி, பச்சை கர்ப்பூரம், அமுக்கிறாகிழங்கு ஆலாதி கர்ப்பூரம் தண்ணீர் விட்டான் கிழங்கு, கர்க்கடகசிங்கி, நெருஞ்சில் யானை சாதிக்காய்

கஸ்தூரி மஞ்சள், மாசு, திப்பிலி, தாளிசபத்திரி
சடாமாஞ்சி வகைக்கு வராகனெடை 4 இது
ஆகியெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி
அமர்ந்த சர்க்கரையுடு சர்க்கரை பலம் 3 போட்டு
தேனிலேயாகிலும் நெய்யிலேயாகிலும் சாப்பிடவும்

தீரும் வியாதி :

உடம்பு எரிச்சல், உதிர மேகவெட்டை
இதுவெல்லாம் குணமாம். கைப்பு புளிப்பு ஆகாது.

பயித்திய பாண்டுக்கு

அரைப்படி உழக்கு உளசி
காந்தத்திலே ஒரு பாதி எடுத்து நாலுதிரம் கழுவிப்
போட்டு உள்ளிப் பூண்டு வராகனெடை 1, சுக்கு
வராகனெடை 1, மாசு உள ரசங்கமுஞ்சு வெப்பு
வராகனெடை 5, சித்தரத்தை வராகனெடை 5,
தேத்தான் கொட்டை வராகனெடை 5, சீரகம்
வராகனெடை 5, கடுக்காய் வராகனெடை 5,
காட்டு மல்லிகை கையாந்தகரை கீழாநெல்லி
இது மூன்றுந்தான் வேர்க்க நாழி சாறு பிழிந்து
கொண்டு இந்த மருந்தெல்லாம் இந்து சாறு
விட்டரைத்து இந்த மருந்தை குழைத்து அதிலே
ரசத்தை இட்டுக் கொண்டு உறவு செய்ய
நன்றாய் அரைத்து சாயும் பச்சை பயும் கிண்ணி
7. அவாய்ப்பட கிழி [illegible]த்துக் கெல்லாம் பாதிபாதி
சாறு பிழிந்து இதையெல்லாம் எடுத்துப் போட்டு

அதுக்குள்ளே இந்த மருந்தெல்லாம் அடைத்து ஒரு கலசத்துக்குள்ளே வைத்து நெய்யாலே வைக்கவும். நாலாநாள்க் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு இத்து தின்னவும்.

தீரும் வியாதி :.

பித்த பாண்டு, வாத பாண்டு, கைகால் அசதி இளைப்பு இதுவெல்லாம் தீரும். பத்தியம் இளைப்பு மாறாயாகது.

பயாத்திய பாண்டுக்குத் திருநீறு லேகியம்

பழுங்காது குறுணி புளியாரை குறுணி காடியாலே ஊறப் போட்டு இரும்பு வட போட்டு ஊறினவுடனே பிசைந்து அரைத்துக் கொண்டு இழுா நெல்லிச்சாறு உரி, அமாயாளைச்சாறு உரி, ஆட்டு மல்லிகைச்சாறு உரி, முந்தின காடியாலே சாத்திலே இந்து முன்றுயாளைச்சாறு உட வாட்டு இருநாழியாகக் காச்சி அதிலே அரைப்படி ஆடுமுக்கு சுக்கு மிளகு திப்பிலி கட்ட உள்ள இந்துப்பு பெருங்காயம் அசமதாகம் வெந்தயம் இவை எல்லாம் பொடி செய்து நெய் நல்ல வெல்லம் இவை எல்லாம் போட்டு திரளாக காச்சி எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிடவும்.

தீரும் வியாதி :.

சோகை பாண்டு, காமாலை காசம் இதுவெல்லாம் தீரும்.

பெருவாள்கபட்டை எருமைச்சாணி காயவை அரைத்து கொள்ளவும் மேனாலை குடிக்க பாண்டுரோகம் தீரும்

பாண்டு கிராணிக்கு
பாளையாரை லேகியம்

பாளையாரைச்சாறு படிக்கொரு
வேர் சுக்கா வேளை சமூலம் அட்ட திருப்பா வேர்
சுத்தக்காசு மரம் பட்டையுங் கொழுந்தும் இலுப்பை
பட்டை அகத்திபட்டையுங் கொழுந்தும் ஆலம்
பட்டையுங் கொழுந்தும் பாவட்டம் புல்லுபுங்கம்
பட்டை அரப்புளா பட்டையுங் கொழுந்தும்
வேளைவேர் ஆடாதோடைவேர் மாங்கொழுந்தும்
16அ வேரும் அரச்சான்று சமூலம் வகை ஒன்றுக்கு
பலம் 4 இடித்து கியாழம் அச்சு இரு மாத்திரைக்
கால குறுணியாட்டு கடுக்காய் தோல் தாணிக்காய்/10
இரும்பு பலம் 6 ஒக்க போட்டு நாலுநாள் ஊறி
மடமாய வைத்து பாகசந்து அரைத்து கொண்டு
அதிலே பழ வெல்லம் பலாரெண்டு பலம் இந்த
கியாழத்துடனே காய்ச்சி குழம்பாய் வருகிற பதத்தில்
சிறுயால் பட்டை பெருமர பட்டை சுக்கு, மிளகு
திப்பலி அசமதாகம் கடுக்காய் காந்தம் பொடி
பண்ணி தூவி லேகிய பதத்திலெறக்கி அந்தி
சந்தி ஒரு பாக்களவு சாப்பிடவும்.
தீரும் வியாதி :-
பாண்டு, கிராணி உதிக்கம், வயறு
கருப்பு இது வெல்லாம் தீரும்

சீர்காதி வடகம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம்,
இந்துப்பு ஓமம், ஏலக்காய்பலம் ஒரு ரயகுருங்காயம்

ஊராகனடை கவ செந்தகம் பலம் ௨ சத்தி
பண்ணி உள்ள உரச்சது பலம் ௫, நெய்காட்டு
ஆறுமாத்து கொள்ளவும். இதுவெல்லாம் சோத்து
கொண்டு மெழுகாச்சமபதுச்சாறு ஊட்டமாரத்து
அல்லையாக தட்டு காசிலட அல்லைநேனில்
கொள்ள போகும்
தீரும் வியாதி :
இரைச்சல், கழிச்சல், அரோசிகம்,
வாய்வு மாரமல், மந்தம் ஈக்காலம் இதுவெல்லாம்
குணமாம்.

உள்ளா கருகு

வெள்ளை சுண்டு பலம் 100 உரச்சு
அரைச்சுக் கொண்டு மாஞ்சு சுக்கு, மிளகு, திப்பிலி
பெருங்காயம், எவ்வச்சாரம், நமச்சாரம், கண்டு
சீலம், சீரகம், கோஷ்டம், சதகுப்பை ஓமம்
கொத்தமல்லி, இந்துப்பு, கல்லுப்பு வெட்டாளை
யுப்பு வளையலுப்பு நல்ல உப்பு என்னுக் கடுகு
இவை ஒவ்வொன்று பலம் 1 பொடி பண்ணி ஒரு
சட்டியில் போட்டு முன் சொன்ன மருந்தும்
போட்டு ஆமணக் கெண்ணை குத்திக் கிளறி
11 மெழுகு பதத்திலறக்கி காலமே ஒரு கொட்டை
பாக்களவு கொள்ளவும்.
தீரும் வியாதி :
சர்வவாய்வு வாதமும் வாத்திரணி
அவத்துமாசமும் சுவாச காசமும் ஐகாசிகப்பு
திமைவலி இளைவதிரும்.

## எலும்புருக்கிநாவல்நெய்பண்ண

நாவல்பட்டை பலம் 100 இடித்து
இருதூணிநீர்விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி
இறுத்து கொண்டு இதுக்கு சீரகம் உ ஊளம்மஞ்சு
அதிமதுரம் வெள்ளிலோத்திரம் இலவம்பிசின்
தாமரைத்தாது குந்திரிச்சம்பழம் அட்டதிருப்ப
வேர் மூத்தக்காசு அசமதாகம் மாவாளை
நாகல் ஊளை கொட்டக்கிழங்கு ஊளாம்மஞ்சு
நிலப்பனையுங்கு இவை ஒவ்வொன்று நார்
கழஞ்சு நெய் -4 பாளையாரைச்சாறு 4 பலம்
-4 அரைத்து கரைத்து வடித்து நக்கவும்
தீரும் ஊயாதி :.
எலும்புருக்கி பெரும்பாடு ரோகம்.

## பஞ்சலவண வடகம்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம்,
ஓமம், கண்டுமூலம், அரத்தை, வாய்விளங்கம்,
கொத்தமல்லி, பெருங்காயம், இந்துப்பு, பொட்ட
-லையுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, கெந்தபொடி
யுப்பு, யவச்சாரம், செவ்வல்லி, கொறுவாம்பஞ்
-சை, தேவதாரம், பெருங்குரும்பை, சாதிக்காய்
மூக்காவேளை பெருங்காயம் வகைக்கு பலம் வ
இடிச்சு வஸ்திரகாயம் பண்ணி எலுமிச்சம்பழச்
சாறுவிட்டு அரைச்சு றெண்டு ஓரகண்டைகாண

வடகம் பண்ணி வைத்துக் கொண்டு காலமே ஒரு வடகம் சாயங்காலம் ஒரு வடகம் சாப்பிடவும்.

தீரும் வியாதி !.

சகல வாய்வு குணமாம்

(வேறு) சித்திர மூலம் பலம் ௨ வெள்ளை சாரணை பலம் ௨, வட்ட திருப்பிலிவேர் பலம் ௨ இது மூன்றும் உடல் உப்பு அரைத்துக் கொள்ளவும். பத்தியம் கசப்பு, புளிப்பு புகையிலை தள்ளவும்.

செவிச் சீப்பாச்சல் செவிட்டுக்கு எண்ணெய்

இந்துப்பு, திப்பலி, சுக்கு, பெருங் காயம், கோஷ்டம், வசம்பு, உள்ளிப் பூண்டு வகைக்கு ஒரு கழஞ்சு கருக்கு நல்லெண்ணெய் சேர். சருக்கொன்றைச்சாறு சேர். இந்த சாறு விட்டு அரைத்து எண்ணெயில் போட்டு குறைச் சாறும் விட்டு எரிச்சு முழுகவும் காது கேட்கும்

வெகுசைத்துக்கு

12.அ

ஆவாரம் பஞ்சகம் நிழலுலர்த்தி சூரணம் பண்ணி திரிபலா சூரணம் பாதி மூத்திர சூரணத்துடனே பின் உப்புகுடுக்க மோரிலே குழப்பி அந்திசந்தி 7 நாள் குடுக்க வெகுசலம் தீர்கும்.

சகல கடிச்சலுக்கு

மனுசர் எலும்பும் வாகை
வேரை, நற்சந்தனம் இவைதனைத்தனியே பொடி
பண்ணி சமன் எடுத்துப் பல்லையால் வைத்து
தினம் வெருகடி தேனிலே கொள்ள சகல
கடிச்சல் தீரும்.

நீரிழிவுக்கு

சுத்தின சீந்தில் வேர்ப்பட்டை
பலம் ௩, சாதிலிங்கம் கழஞ்சு 5 எடுத்துப்
பொடி பண்ணி வைத்து தேனில் குடுக்கத் தீரும்

நீரிழிவுக்கு இரும்பு செந்தூரம்

பதமாய இரும்பை மெல்லிதாய
தகடு தட்டினது கழஞ்சு 6, நெல்லிக்காய்
கெந்தகம் கழஞ்சு 2 இவை முத்தின கருவேலம்
பட்டை சாற்றிலரைத்து தகட்டில் பூசி பூ
தொட்டில் வைத்து இரு இரு கொண்டு மூடி சீலை
மண் செய்து பானையுஞ் சாரயிட்டு அறுபது
நாழிகை எரிய செந்தூரமாம் எடுத்து
ஆவரணையில் வைக்கும் போது ஒரு பணவிடை
எந்தி ஊறல் எடுத்து பொடி செய்து போட்டு வைத்து
நீரிழிவுக்கு ரெண்டு பணவிடை செந்தூரம்
வாழை பழத்தில் வைத்து குடுக்க நீரிழிவு தீரும்.

முகட்டைப்பருத்தை நாசி நீர்முள்ளி
ஊரை நாசி நாயுருவி ஊரை நாசி இவை பொடி
பண்ணிக் கலந்து வெருகடி தேனில் குடுக்க
வெகு சலந் தீரும்.

## நீரிழிவுக்கு ரசப்பறயோகம்

ரசம் வராகனெடை 1, மனோ
சிலை வராகனெடை 1, நாகம் வராகனெடை 1 ஒரு
புதுச்சட்டியால் முக்குறத்தை யிலையைத் தேய்த்து
அடுப்பில் வைத்து அதிலே நாகத்தை யிட்டு உருகி
முன்றிலே ரசத்தை யிட்டு மனோசிலையும்
பொடி பண்ணி போட்டு கிண்டி கொண்டு தேய்க்கப்
பொடியாம் இந்த பொடியில் ஒரு பணவிடை
வாழைப் பழத்திலிட நீராளமாம் அந்தநீர்
குடிக்கவும் இப்படி ஒரு மண்டலம் கொள்ள நீரிழிவு
தீரும்.

13அ ## மேகத்துக்கு

கோரைவேர் வெட்டிக்
கொண்டுவந்து பசுவின் பாலிலரைத்து நாழிப் பாலில்க்
கொள்ளவும். எட்டு நாள் கொள்ளவும் இதால்
அசாத்தியம் இருக்கிற நாலுவகை மேகமுந் தீரும்
இப்படி முத்தக்காசு கொள்ளவும். கைகண்டது.

மாந்த சைலத்துக்கு

ஆகளை பொடி ரூ, நல்லெண்ணெய்க்கு பொடி ரெண்டும் மத்திச்சுக் கொள்ளவும் மாந்தமிலந் தீரும்.

நீராமிவுக்கு நாளிகேர வடகம்

தென்னம்பாளை, மருதம்பட்டை, அத்திப்பட்டை ஆவாரம் வேர்பட்டை, கொன்னைப் பட்டை தேத்தாங் கொட்டை இவை வகைக்கு பலம் 20 கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வெள்வேலம் பட்டை, கருவேலம் பட்டை, நாவல்ப்பட்டை முள்ளி இலவம்பிசின், மரம்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, இச்சிலபட்டை இவை வகைக்கு பலம் 10 இவையெல்லாம் இடித்து கலத்தண்ணீர் ஊட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி இறுத்துக் கொண்டு குழம்பாக்கி இறக்கி வைத்து மேல் மருந்து கற்பூர சிலாசத்து பலம் 2 கல்மதம் பலம் 2 மகாமேருகப் பலம் 2, காந்தம் பலம் 2 அரப்பொடி பலம் 2 மரம்மஞ்சள் பலம் 2 நீர்முள்ளி வேரை பலம் 1 களிப்பாக்கு பலம் 1, கருங்குங்கிலியம் பலம், காட்டாத்திப் பலம் ரூ பருத்திக் கொட்டைப் பருப்பு பலம் 2, ஆவாரை வேரை பலம் 2, கருவேலம் பிசின் பலம் 2 வாலம்பானை பலம் 2 முள்ளி வேலம்பிசின் பலம் 2 யிவையெல்லாம் பொடித்து வஸ்திரகாயம் பண்ணி முன் சொன்ன கஷாயம் குழம்பு காய்ச்சி இறக்கி கையில இந்த சூரணம்

மெல்லாப் போட்டுக் கிளறி உடனே குறுவாராக
-ளிடை வில்லை பண்ணி இரு வில்லை தேனில்க்
கொள்ளவும் சிலேத்தும மேக மெல்லாம் உரு
யருந்தாலும் நீராதிராதுவல்லாமல் தீரும்.

தீரும் நோய் :-

எலும்புருக்கியும் தீரும், இகாசந்தின்ற
சலசதீரும் பரம தேவராலே சொல்லப்பட்ட நாடி
கோவுடகம்.

அ எலும்புருக்கி வங்கபற்பம்

வங்கபற்பம் பணவிடை 3,
காந்தபற்பம் பணவிடை 3, அப்பிரகபற்பம்
பணவிடை ஒன்றாய் கூட்டி வெண்ணையில்
தேனில் கொள்ள பாகு உபயோகம். வெள்ளியம்
பலம் 1, உருக்கி தகடு தட்டி இசலிறகு போலே
தகடு நறுக்கி அம்மாப் பச்சரிசி சமூலமும்
காயப் போட்டு பொடி பண்ணி மெல்லிய சீலையில்
பரப்பி அதுமேலே வங்கத் தகட்டைப் பரப்பி
மேலுந் தூளைப்போட்டு உருட்டி விளக்கில் பத்த
வைக்க பொரி போலே நீறும் எடுத்து பற்பம்
பண்ண வைத்துக் கொண்டு கப்பவும் ஆவாரை
சமூலமும் விரையும் செட்டை விரை வட்டத்
திருத்தி விரை அகத்தி விரைத் தாமரைப்பூத் தாது
பருத்திப்பூத் தாது செவ்வல்லிப்பூத்தாது கஞ்சா

ஆரை, நாயுருவி ஆரை உமத்த ஆரை இவை
சமனாய் எடுத்து பொடி பண்ணி ஆயுளுக்கு
உண்கிறதிலும் எடுத்து இரண்டு விராகனிடை தேனில்
கொள்ள நீரழிவு தீரும்.

ஆ நீரழிவு தாகத்துக்கு

தேத்தாங்கொட்டை பாலில்
போட்டு காலமே எடுக்க போர் மாராயவேர்
புன்னைக்காயளவு அரைத்து அந்த பாலிலிட்டு
அடமட்டு எடுத்து நல்லெண்ணெயில் குழப்பி குடிக்க
மிகுதியும் மந்தாரமானால் பச்சைபயறு உமி
சாறு உள எடுத்து ராத்திரி பனியில் வைத்து
காலமே சர்க்கரை எடுத்து குடிக்கவும் தாகந்தீரும்

நீரழிவுக்கு

அல்லாரை பால் ஒரு படி சீரகம்
பலம் ரூ. இரண்டுமரைத்து வடி கட்டின எருமை
தயிரில் கலந்து குடிக்கவும்.

ராமாறுதாகம்

நால்கட்டாருந்திப் பட்டைபலம் 10
ஆகுலப்பட்டைபலம் 10 இரண்டு வகையுந்தூள்
பண்ணி வைத்து கொண்டு ஒரு பலந்தூள் போட்டு
15 அஞ்சு தேத்தாங்கொட்டை முறித்து போட்டு இரு
நீர் விட்டு உரியாக காய்ச்சிக் குடிக்கவும்
குடிக்கும் போது தேத்தாங்கொட்டை நஞ்சான்றும்
போட்டு ஆரையை எடுத்து அரைத்து குழப்பிக்
கொடுக்கவும் இப்படி ௩ நாள் குடிக்கவும்.

## அங்காரசெந்தூரம்

காயம் பலம் 1 சுத்தி பண்ணி
புதுச்சட்டியில் மூட்டு உருக்கின நாகநிறை 10
தாழைமடல் பொடியாக நறுக்கி வைத்துக்கொண்டு
சிறுகச்சிறுக போட்டு கரண்டியைக் கொண்டு வறுக்க
பிறகு பசளி இருமடி நறுக்கி வைத்து கொண்டு
வறுக்க பிறகு சாதிக்காய் பலம் 1, சாதிப்பத்திரி
பலம் 1 கி, கிராம்பு பலம் 1, பச்சை கர்ப்பூரம்
வீராகனிடை 1 இவை தனித்தனியே பொடிபண்ணி
தனித் தனி வறுக்கவும் இப்படி நாற்பது நாள்
வறுக்கவும். பிறகு கர்ப்பூரம் போட்டு சற்றே
ஆ வறுத்து இறக்கவும் இலம்படி வன்னமாய்
செந்தூரிக்கும் தேன் வெண்ணை இதுகளிலே பண
விடை குடுக்கவும் தீரும். ராமாயாரமாறு
கஷாயங் குடுக்கவும் இந்த மகாயோகங்களெல்லாம்
தீர்த்தருளுகை.

## ரெத்தசாரமயத்துக்கு

பசுவின் பாலும் கோமூத்திரமும்
குடிக்க ரெத்தசாரமயந் தீரும்.

நெல்லிமுள்ளி சிந்தில் கொடி ரெண்டும்
குடிநீர் கஷாயம் வைத்துக் குடிக்க தாகம் சுரம்
அருசிகம் இருபது வகை மேகமுந் தீரும்.

கடுக்காய் கருவேப்பிலை கொழுந்து
சிறுபயறு கோதும்பை பயிற்றி இவைசமன் கஷாயம்
வைத்து கொள்ள இருபது வகை மேகமுந் தீரும்.

## இருபது மேகத்துக்கு உருண்டை

164

ஆவாரம் பிசின் பட்டை பலம், வாலாம்பிசின், கருங்காலிப் பிசின், வட்டத்திருப்பி வேர் மனோரம் காந்தாம் இவை ஒவ்வொன்று வராகனிடை 5 ஆவாரம் வேரை வராகனிடை 2ளு பெருமரத்துத்தி வேரை வராகனிடை 2ளு கஜானா சாரகம் வராகனிடை 2ளு, மனோசிலை வராகனிடை 2ளு, காரியம் வராகனிடை வ, ரசம் வராகனிடை அ, சுத்தக்காசு வராகனிடை 2, வட்டத்துத்தி வராகனிடை 2, தென்னம்பாளைத்தூள் வராகனிடை 12, ஆவாரையிலைத்தூள் வராகனிடை 12, திரிபலை வராகனிடை 7 இதுவல்லாமல் திரிபலை கஷாயம் வைத்து அந்த கஷாயத்தினால் வார்த்து அரைத்து முப்பத்திரண்டு பணவிடைப் பிரமாணம் உருண்டை பண்ணி தேனில் ஒரு நாழிகை கொள்ள இருபது மேகமுந் தீரும்

## இருபது மேகத்துக்கு

வெள்ளறுகையும், கற்றாழைமடலும் அதைச் சட்டியால் வாகைய நீராளமாகும் இந்த நீர் நாழியால் சீரகம் பலம்ளு, கீழாநெல்லிவேர், ஆசீரகம் வகை வாசுதுவ் இட்டு சர்க்கரை அரைப் பலமும் இட்டு இந்த சாற்றில் குழப்பி ஒரு பண விடை அளவும் இட்டு இறுத்து குடிக்கவும் பத்தியம் - உப்பாலா பசுவின் பால் இட்டவும் - மூன்று நாளைக்கு சகல மேகமுந் தீரும்.

## மேகருளகை

அரமைபாத அஞ்சனக்கல்லுக்
கிட்டம் என்று தேத்தான் இரை நிலப்பனைக்
கிழங்கு, கருக்காய், ஆவாரம் பட்டை, முசுட்டை
வேர், இலவம் பட்டை வகைக்கு பலம் 5 இட்டு
நருக்கி பதக்குத் தண்ணீரில் போட்டு ஒரு
பிரயாக காய்ச்சி வடித்து இந்த கசாயங் கொண்டு
முன்னெடுத்த மருந்தை ஒரு சாமமரைத்து பண
இடைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக்
கொண்டு ஆவாரம் இலை ஒருஉழக்கும் உருண்டையும்
இட்டு இடித்துப் பொடி பண்ணி மேலால் குடிக்க
17 ஆவாதப் பிரமேயந் தீரும். நெல்லிக்காய் சாற்றில்
குடிக்க மூத்திரப் பிரமேயந் தீரும் தேனில் கொள்ள
சேத்துமப் பிரமேய மேகந் தீரும் மேகத்துக்
கெல்லாம் சர்க்கரையும் தேனும் இட்டு குடிக்க
கைப்பு புளிப்பு தவிர்க்கவும் சரி பார்த்துக்
குடிக்க இருபது மேகந் தீரும்.

## துன்மாங்கிசத்துக்கு

தொழுமுசுட்டை வேர்த்துளசி
சாமைப் பொரியும் சரி இட்டு அரைக்கவுஞ் சு
வெண்காரமும்ப் போட்டு அரைத்து வைத்துக்
கொண்டு ஒரு பலம் இளவென்னீரில் போட்டு
குடிக்க ரெண்டு நேரமும் ஒரு பொழுது குடிக்க
துன்மாங்கிசமும் நீரடைப்பு தீரும்.

மகாமேகத்துக்கு

கற்பூரவள்ளிச்சாறு
நல்லெண்ணை கூட்டி குடிக்க இப்படி மூனு
நாள் குடிக்க மகா மேகந்தீரும்

நீர்கட்டுக்கு

ஆ

வெப்பாலையிற்கு குருக
நறுக்கி வெள்ளாட்டு மை போலே அரைத்து
நன்னைக்காயளவு இளவெள்ளில் கொள்ள
மேகந்தீரும். இப்படி ஒரு மண்டலங் கொள்ள
நீரடைப்பு தீரும். மேகம் நீர்க்கட்டுந்தீரும்

ரெத்தமாரமேகத்துக்கு

பூலாங்கொட்டை 10, தேத்தாங்
கொட்டை 20 ரெண்டும் மூநாள் உரலிலே ஊரப்
போட்டு மறுநாள் அந்தப் பாலிலே அரைத்து
பாக்களவு பணவெல்லமும் கரைத்து குடிப்பாக
குடிக்க இப்படி அஞ்சநாள் கொள்ள ரெத்தமார
மேகந்தீரும் பெரும்பாடுந்தீரும். நெய்தற்
சமூலம் நாழிச் சாறு பிழிந்து அதில் கட்டிக்
கருப்பட்டி கரைத்து மூனுநாள் கொள்ள ரெத்த
மேகந்தீரும்.

நீர்கடுப்புக்கு

கற்றாழை சோறு பிழிந்து கட்டி
எருமைதயிரும் ரெண்டும் கூட்டி மூனுநாள்
குடிக்க கடுப்பு தீரும்

## சக்கரைப் பாரமேகம்

16-அ

புளியாரைச்சாறு உழ, நல்லெண்ணெய் -ரூ, பனைவெல்லம் பாக்களவு இவை மூன்றுங் கூட்டி கலந்து காலமே கொள்ள 5 நாள் கொள்ள சக்கரை பாரமேகந் தீரும். வெகுநாளாய் சென்ற மேகம் எரியும் புண்கள் யாவை தீரும்.

## ரெத்த அதிசாரத்துக்கு

சாதிக்காய், வெண்காரம் அப்பிரகம் ஊமத்தம் இலை வகைக்கு இராகெடை 1 அபின் இராகெடை 2 இவை கஞ்சாயிலை சாற்றில் நாலு நாழிகை அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி திப்பிலி கஷாயத்தில் இரு உருண்டையிட சகல கிராணியுந் தீரும்.

சாதிக்காய், அதிவிடையம், சுக்கு, அத்திப்பூ அபின் ஊமத்தம் இலை சணல் இலை சமன் கூட்டி கஞ்சாயிலைச் சாறு விட்டரைத்து கடுகு கொறப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அனுபானத்தில் கொடுக்கவும் அதிசாரந் தீரும்.

ஆ சகல கிராணிக்கு சீதக் கிராணிக்கும் மாந்த கிராணிக்கு ரெத்த கிராணிக்கும் பாரவாத கிராணியும்

வெண்காரம் அபின் ஊமத்தம் இலை இவை சமன் கூட்டி சாராயம் விட்டு ஒரு சாமம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை

பண்ணி வைத்து தேனால் பசுவின் நெய்யாவதுரைத்து ஒரு உருண்டையிட அருசக்ராணி தீரும். இப்படி 10 நாள் குடுக்க எந்த கிராணியுந் தீரும். பத்தியம் தயிர் மோர்க் கூட்டவும் பித்த கிராணிக்கும் ரெத்தச் சிராவகம் பிரதவாக் கிராணிக்கு.

தண்ணீர்முட்டான் கிழங்கு பாலில் போட்டு காய்ச்சி சர்க்கரை கூட்டி குடுக்கவும் ரெத்த அதிசாரந் தீரும். பலவாதக்குடிச்சலுக்கு

சுக்கு, மிளகு, திப்பலி கடுக்காய் சிறுகுமிள வேர் கடுக்கொடி கருப்பு சீரகம் அசமதாகம் சமன் கூட்டி இருக வறுத்துப் பொடி செய்து வெருகடி பிரமாணம் நல்லெண்ணையில் வெருகடி பிரமாணம் குழைத்து கொள்ள ரெத்த சிராவகம் பிரதமாக கிராணியும் தீரும்.

17-அ பலவாதகுடிச்சலுக்கு

கொச்சி கருப்பு கடுக்காய், இந்துப்பு மாங்கொட்டை ஓமம் கூட்ட திருப்பா வேர் அசமதாகம் அதிமதுரம் சுக்கு இவை சமன் கூட்டி சிவக்க வறுத்துப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு வெருகடி நல்லெண்ணெயில் கொள்ளவும். பத்தியமாக நடக்கவும். தயிர் கூட்டவும்.

சாதிக்காய் 1, பச்சைக்கற்பூரம் 4 சர்க்கரை 6 இவ்வகை ஒரோகள் படி கூட்டி

சற்றே வறுத்துப் பொடி பண்ணி தேனாகப் பார்த்து தினமொரு உறாகத் தின்ன மூன்றுநாள் குடுக்க சாப்பிடக்கொத்த கசிச்சலுந் தீரும்.

மகாகிராணிக்கு

ஜாதிக்காய், இலவம்பாளன், கிராம்பு, மாதளம்பிஞ்சு, நீர்முள்ளி தோல்மோக்கினை இவை சமன்கூட்டி எருமைத் தயிரில் குழப்பிக் குடுக்க மகா கிராணி தீரும் - அதிசாரமும் ஊறாகண்டை 1 பொடி பண்ணி வெல்லத்தில் குடுக்க மூனு நாள் குடுக்கவும்.

ஆ சிலேத்மாதி சாரத்துக்கு தீபனத்துக்கு

கழலபருப்பு, கடுக்காய், சுக்கு அசமதாகம் இருளாநெல்லிவேர் இவை சமன் கூட்டிப் பொடி பண்ணி நல்லெண்ணையில்ப் போட்டு கிரக்க காச்சி வடித்துக் கொண்டு பெருங்காயம் மென் பொடி தூவி குடுக்க யாந்தந்த நோவொடெ கூடின சிலேதுமாதி சாரம் தீரும் தீபனமுண்டாம்.

சீந்தி திப்பிலி சமன் கூட்டி கறாபம் வைத்து யாந்துப்பு மேல் பொடி தூவக் குடுக்க தீபனமுண்டாம்.

ரெத்த கிராணிக்கு

திரையானை மொங்கி பசுவின் மோரில் அரைத்து நீர்வண்ணம் போட்டு குழப்பிக் குடிக்க ஏழுநாள் குடுக்க ரெத்தகிராணி தீரும்.

20அ சகல அதிசாரத்துக்கு அன்பகிருதம்

சுக்கு பலம் ௪ நருக்கி தண்ணீர்ப்
பதக்கு: தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாக
காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் இருநாழி
பசுவின் நெய் விட்டு கோஷ்டம் ஏலம், இலவங்கம்,
சாதிகாய், திப்பிலி மூலம், மிளகு, அத்திப்பூ, தாய்
அரங்கம், பெருமரப்பட்டை, சிறுவழுதலைவேர்
வெள்ளறுகுவேர் வேர்பட்டை, பெருங்குறிஞ்சாவேர்
நாயுருவிவேர் ஒவ்வொன்று மூன்று கழஞ்சு இட்டு
அந்த கஷாயம் வார்த்தரைத்துக் காய்ச்சி கருக்கு
திரளுகிற பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொண்டு
தினம் ஒரு கரண்டி நெய்யாய் இருபோழ்க்
கொள்ளவும். பேதியாகமான கிராணி மூலம்
இரைப்பு இவையெல்லாம் தீரும். பாலுண்டாம்
தாது விருத்தியுண்டாம் இந்தப் பிரயோகம்

அராக் கடுப்புக்கு புலாதிகிருதம்

குத்தக்காசு பலம் 20 நருக்கி
பதக்கு நீரில் போட்டு நாலிலொன்றாக காய்ச்சி
வடித்துச் சாறு நாழி நெய் 2 நாழி கருப்பு
திரிகடுகு பங்கபாளைவேர் அசமதாகம்
ஆயிரமொன்று மூன்று கழஞ்சு இட்டு கஷாயம் வைத்து
அந்த கஷாயம் வார்த்து அரைத்து கரைத்து
பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு சிறுகரண்டி
யளவு கொள்ள அதிசாரம் அராக்கடுப்பு
2 விதம் வாயுகுறைவு இவை தீரும்.

5.1.90

## கெந்தி தயலம்

நாயுரும் வாகுது சாறு 3 நல்லெண்ணெய் 2
முத்தக்காசு வெட்டிவேர், கொட்டிக்கிழங்கு,
நன்னாரி வேர், சித்தமட்டி வேர், அதிமதுரம்,
தேவதாரம், பச்சிலை, நற்சந்தனம், கற்கோலம்,
செஞ்சந்தனம், விலாமிச்சம் வேர், வெந்தயம்
ஒரொன்று அரைப்பலம் இருக்காடு உட்டி
அந்த சாற்றிலரைத்து பதத்தில் வடித்து வைத்துக்
கொண்டு தினம் ஒரு கரண்டி எண்ணெய் தேய்க்கவும்
தீரும் வியாதி :

இருவாதக் கிராணியும் அதிசாரமுந்தீரும்

## அயனுகருப்புக்கு உருண்டை

அதிவிடயம், அபின், சாதிக்காய்,
அசுவாதி, அசமதாகம், சீரகம், வெந்தயம், பெரு
மரப்பட்டை, குடசப்பாலைப்பட்டை, அயலப்பட்டை
21. அரலம், களிபாக்கு, காசுக்கட்டி, முந்திரியப்பழம்,
பேரீச்சம்பழம் கல்நார், கல்மதம் ஊலவமூச்சதை
மாதுளம்பழச்சதை வேர், இலவம்பிசின், புளியங்
கொட்டை தோல் மாங்கொட்டை ஊறை அதிமதுரம்
இவை சமன் கூட்டி கஞ்சாயிலை சாற்றில் ஒரு
சாமம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை
பண்ணி வைத்து கருப்பு ஒரு உருண்டை எருமை
தயிரில் குடிக்கவும் இசாமிகட கடப்பாவுக்கு
தென்னம் பாளை அவித்துச் சாறு பிழிந்து காய்ச்சி
அதில் ஒரு உருண்டை போடவும். ~~[illegible]~~

ரெத்தமுஞ் சீதமும் போகுறதுக்கு: கோரைக்கிழங்கு யரைத்து பாட்டவாயளாக வைத்து அதைப் பாசிந்து அந்த தண்ணீரில் இரு உருண்டை குடிக்கவும் இளம் பருவனுக்கு மாதளம் பழச் சாற்றிலிடத் தீரும்.

நாள்ப்பட்ட கழிச்சல்

அபின் பணவிடை 2, ஆலம் பருத்து சுண்ணைக் காயளவு ரெண்டுமரைத்து எருமை தயிரில் குடுக்க மூணு நாள் குடுக்க அஞ்சாறு வருடத்துக்கு கழிச்சலுந் தீரும்.

மூலத்துக்கு நெய்

ஆ

சிறுகாஞ்சொறிவேர், முத்தக் காசு, அத்திப்பட்டை, பெருமரப்பட்டை, புங்கம் பட்டை, சித்திரமூலம் சாறணைவேர் இவையொன்று பலம் 6, நருக்கியரைத்து குறுக்கி நீர்விட்டு எட்டிலொன்றாக காச்சி வடித்து இதில் திரிகடுகு அதிவிடையம், ஆனைத்திப்பிலி, அத்திப்பூ கிராம்பு சாதிக்காய் இருவகைச் சீரகம், கோஷ்டம் உவாளம் பட்டை அறக்கீரைவேர் இவையொன்று கழஞ்சு கொண்டு அரைத்து கரைத்து நாழி உழ பசுவின் நெய் விட்டுக் காச்சிப் பதத்தில் வடித்து தினம் நாலு காசிடை நெய் கொள்ள இதற்கு மூலகிராணியும், இளைல் மலைக மகோதரம் இவைகள் தீரும்.

## கண்டமாலைக்கு எண்ணெய்

அப்பைக்கிழங்கு வேளை
வேர் சத்திசாரணைவேர் நன்னாரிவேர
சிறுகாஞ்சொறிவேர் சிறுதுளைவேர் வாகைக்கி
பலம் 5 நல்லவேளைச்சாறு 3 வெண்காரம்
காசிடை-ய வெள்ளுள்ளி பலம் 5 மிளகு 2 ரி
இவையரைத்து நல்லெண்ணெய் ஆட்டு எரித்து
22அஸ்தத்தில் வரத்து தினம் உடிக்கண்ணெய் குடுக்கவும்.

## முளைக்குத்துக்கு

புங்கந்துளிர் எண்ணெய் பண்ணிபட
முளைக்குத்து தீரும்.

## உந்த தலைமயிர்க்கு

மயில்மாணிக்க மட்டு முழுக
மயிர் வளரும்.

நெல்லிமுள்ளி நாலுநாள், கையாந்
தகரை நாலுநாள் பொன்னாங்காணி சிறுகீரை
தீர்ப்பூளா யிவையாவை யட்டு முழுக மயிர்வளரும்.

## பொடுகு

குறட்டை பழ ஊறை எடுத்துப் போட்டு
தலையில் தேய்க்க பொடுகு தீரும்.

## புழுவெட்டுக்கு

நெல்லிமுள்ளி சிறுபிருதலம்
பழசாற்றிலரைத்து தலையில் தேய்க்க புழுவெட்டு
தீரும்.

திம்மட்டிக்காய் மேலே சிரைப் போட்டு மயிர் உதிர்ந்த இடத்தில் தேய்த்து கருவைப் போட்டு மிளகையுந் தேய்த்து கருவா இப்படி மூன்று தரந் தேய்த்துக் கழுவ மயிர் முளைக்கும்.

குப்பைமேனி காரையாலை நெருக்கம் பாலிலரை வைத்து மூன்று நாள் வைத்துப் பலக் குன்றிப் பருப்பும் வெள்ளைக்காரகும் கூட்டி உருண்டை பண்ணி வேப்பெண்ணையிலரைத்து உடலுக் கிடவே பூச தலையில் புழுவெட்டுத் தீரும்.

ஆ நாகமலைக் அரைத்து அவரையிலைச் சாற்றில் ஒரு ஜாமையிட சங்கம்பழச் சாற்றில் ஒரு ஜாமையிட் கையாந்தகரைச் சாற்றில் ஒரு ஜாமையிட்ட இப்படி நாளைக்கு உலர்த்திப் பொடி செய்து நாகம் நல்லெண்ணையிற் கலந்து குப்பியில் சாறு நாமாட்டு 40 நாள் தானிய புடத்தில் வைத்து 10 நாள் தலையில் தேய்க்க அதா பொடிச் சிரங்கு கபால குட்டத்துக்கு தீருதல் அசகுன்னி தலையிற் கூத்தும் தம்பயிர் நரைவரா மிளவு செம்பயிர் புழுவெட்டு இவை தீரு மயிர் வளரும்.

பெரும்பாட்டுக்கு

அயலப்பட்டை நீர்வத்து அரைத்து எலுமிச்சங்காயளவு பச்சரிசி மாவில் அடுச் சுட்டுத் தின்ன பெரும்பாடு தீரும் இருகாலும் தாரமாகன்: பழம்பாசிரோகுத்து எலுமிச்சங்காயளவு அவல் வெள்ளிய மலைஅட்ட சாம்பல் அவள்அ வெல்லம் மூன்றும் சமன்கூட்டி நல்லெண்ணையில் இடிப்பு உழக்கொண்ணுக்குக்க வெதி நாள்சுற்ற பெரும்பாடு ரத்தரோகம் தீரும் உடனே

ராகடங்களாக வந்ததுக்கு

23-அ

அன்னாப்பட்டையும் காயயு
ளைவத்து சாறுபிழிந்து உள்ளுக்கு குடுத்து மேலுந்து
பூசவர ராகடங்களாகவந்த பெரும்பாடு
நிற்கும்.

ஆலம்பட்டை அத்திப்பட்டை
அரசம்பட்டை இச்சிலப்பட்டை நாவல்பட்டை
சமனாய் பொடித்து சாறுபிழிந்து தேன் கூட்டி குடிக்கவும்
ரெத்தமாயச்சாய்க்கிறத்துக்கு நிற்கும்.

எரும்புருக்கிக்கு மருந்து

தவசி முருங்கையிலை எலுமிச்சம்
காயளவு பசுவின் வெண்ணையும் கூட்டி 3 நாள்
குடிக்க எரும்புருக்கி தீரும்.

சித்திரகாச்சம்

உரிய பசுவின் பால் நாழித்
தண்ணீர்விட்டு உழுக்காய்க் காச்சி மணத்தக்காளி
யோடு பாலகுக்காயம் பண்ணின தால் இருகாலிட
போட்டு குடிக்க தீரும். அன்றுயிலை அரைத்து நல்
-லெண்ணையில் பொரித்து தின்னவும்.

ரெத்தவகை கூறுக்கு சித்திரமூலதயலம்

கொந்தவேலவேர் முப்பதுரெண்டு
பலம் இடித்து குறுணி நீர் விட்டு இருநாழியாக
காச்சி இதில் கடுக்காய் பலம் ௫ திப்பிலி மூலம்
அதுபலம் ௫ சித்திரமூலம் பலம் ௫ கானவ அரைத்து
நல்லெண்ணெய் கிறாட்டு மாவிட்டு காய்ச்சு

சாந்து அரைத்து தினம் இரு கரண்டி கொள்ளவும்
தீரும் ஆயாதி :-

ரத்தபாத்தம், ரத்தவாந்தி, ரத்தவெத்தும்
மோற்ற மாரமயம், மோற்றகலைபம், ரத்த அகோரணையும்
இவை தீரும்

ரத்த பாத்தத்துக்கு

அத்திப்பழத்தை அரைத்து எருமை
பாச்சாங் காயலைவு தேனில் சாரைத்து குடிக்கவும் 8
நாள் கொள்ள ரத்த பாத்தம் தீரும்.

ரத்தவாந்திக்கு

எருமைதயிர் பசுவான் பாலும்
வெண்ணெயும் தேனும் சமன் ஆப்படி உளவாக்கு
கலந்து எட்டு நாள் குடிக்க ரத்த வாந்தி தீரும்

ஆவாரங்கொழுந்து எருமைதயிர்
அரைத்து தலையில் தேய்க்க உள்ளுக்கும் ஆவாரங்
கொழுந்து சீரகமும் அரைத்து எருமைதயிர்
உறையில் குழப்பி மூன்று நாள் குடிக்க ரெத்தபாத்தம்
தீரும் அப்படி பண்ண தீரும் கண்டது.

244 கண்ணாலே ரெத்த ஒழுகுறதுக்கும் மூக்கு தொண்டை
மயிர்பத்திலே ரத்தம் ஒழுகுறதுக்கு

அருகஞ்சார் 3. பசுவான்பால் 3
நெய் 2 இவை கூட்டி காய்ச்சி வைத்து மூக்கில்
ரெத்தம் கண்டால் நசியமிட கண்ணில் ரெத்த
கண்டால் கண்ணிலிட காதில் ரெத்தம் ஒழுகுந்
தாலும் காதிலிட தொண்டை மயிர் பத்தில் ரெத்தம்
ஒழுகுந்தால் உள்ளும் உடபுறமும் ஊணைக்க ரெத்த
பாத்தமெல்லாம் தீரும்

கையாந்தகரைச்சாறு பசுவின்
வெண்ணெயு தலைக்கு தேய்க்க முக்கு ரெத்த
மாறும்

ரெத்தனாதி குளிகைகளுக்கு

அத்தமதுராசி, நெல்லிமுள்,
கடுக்காய், கற்பூரம், சித்தமரம், பொன்னாங்காணி
சிறுக்கீரை, சூளா வேரும், ரத்தப்பூ வெற்றிலை
யோடு தனிலொத்த வெள்ளைத்தாமரை இக்கவே
தட்டி வைத்து முத்தோடு பவளம், செம்பு, இரும்பு
சாதிலிங், பொன் வெள்ளி இத்தனை யெல்லாஞ்சுட்டு
எரும்பாச்சம் பத சாற்றிலரைத்து மைத்தன உருண்டை
செய்து வெயிலுலர்த்தி வைத்து தயலம் கண்ணுக்காகும்
ரெத்தனாதி யுண்டை தானே

சந்திரரோதைய குளிகை

ஆ

கற்பூரம், முத்தக்காசு,
பசகரை திப்பிலிப் பருப்பு, மரம் மஞ்சள், அதிமதுரம்
வெள்ளிலோத்திரம், ஏலம், வெண்கடுகும், தாளி
வெண்காரம் பொரி மனோசிலை முத்து பவளம்
சங்கு மாதரோகனி அஞ்சனம் பருப்பு திப்பிலிப்பருங்
கிழங்கு கிராம்பு சமன் தட்டி பசுவின்பாலில் மூணு
சாமமரைத்து நிழலுலர்த்தி மீண்டும் மாதளம்பழச்
சாற்றில் மூணு சாமமரைத்து வேப்பங்காய்
பிரமாணம் உருண்டை பண்ணி முலைக்கால்
காடிப்பனை மட்டை சாறு சாறு மாச்சப்பழச்சாறு தேன்
இதுகளுல் தேய்ச்சு கண்ணிலிட சகல ரோகமுந்
தீரும்.

## கற்பூராதி குளிகை

கற்பூரம் பரக்க பலகறை பாஷாணம், மரமஞ்சள், திப்பிலி, இந்துப்பு, துத்தம் கடல்நுரை, காவிக்கல்லு கொடிப்பச்சை சங்கு செம்பு சிவனிலாங் கிழங்கு உப்பச்சி இவை சமனாய் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து வேப்பங்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி தேனிலுரைத்துக் கண்ணிலிட கண்ணில் வந்த ரோகமெல்லாந் தீரும்.

## கற்பூர பஞ்சாமிர்தம்

25அ

கற்பூரம், இந்துப்பு துத்தம், திப்பிலி, சங்கு இவை சமனாய் எடுத்து இந்த பழச்சாறு விட்டு ஒரு சாமமரைத்து வைத்து மை போலானவுடனே எடுத்து சிமிழில் கண்ணிலிட கிரண சக்கரம் படலம் ஆணிப்பூ புகைச்சல் எரிச்சல் வெண்ணோக்காடு திமிரப்படலம் நீர்முட்டல் இவை தீரும்.

## சந்திரபாலை

எள்ளுப்பூ 80, பளகு 16, கிராம்பு 50, திப்பிலி பாசி 60, நீர் விட்டரைத்து திப்பிலியளவு உருண்டை பண்ணி முலைப்பால் தானரைத்து கண்ணிலிட முளைப்பட்ட பூ திமிர்ப்படலம் இவை தீரும்

## சூரியோதய குளிகை

தெல்லைச் சாரணை வேர், வெள்ளைக்காக்கணான் வேர், அஞ்சனக்கல்லு கோஷ்டு கசாயம் இவை சமன் எடுத்து கையாந்தகரைச்

சாறு, நெல்லிக்காய்ச்சாறு ஆரத்து ஒரு சாமமரைத்து ஆதிப்பால் மாறமாணம் உருண்டை பண்ணி முலைப்பால் தேன் பசுவின் நெய்யுமரைத்து கொள்ளவிட திமிர படலம் காசம் காப்பு இவை தீரும்

சர்வாங்குசனம்

ஊர்சுவ பத்திராவேர், திருசெண்ம் கப்பு, சங்கம் ஊரை, நகாம் வேததாரம், தாங்குநெ, திரவுனை, மஞ்சள், மரமஞ்சள் இவை சமன்கூட்டிப் பொடி பண்ணி வெள்ளாட்டு மூத்திரத்தில் 15 நாள் ஊறவைத்து எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சகல நேத்திரத்துக்கும் அனுபானத்திரத்திட ஈரைத பசாசுகளுக்கு முலைப்பாலுமரைத்து கொள்ளவிட தீரும்.

நேத்திர சூடாமணி

சுத்தம், பித்தரோகரணி, கர்ப்பூர சிலாசத்து நாபசங்கு பவளம் கடுக்காய் திப்பிலி பல்கரை வெண்கல்ப் பொடி கப்பரி செம்பு பொடி கடல்நுரை மஞ்சள் சர்மாதீவாசு அஞ்சனும் முத்து இந்துப்பு பசுவின்பல்லு கிளம்பு கொம்பு இவை சமன்கூட்டி முருங்கையிலைச் சாற்றில் நாலுநாள் நாலு சாமமரைத்து நீள உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அரியவரைச்சாறு கூதல் முருங்கை யிலைச்சாறு ஆகுதல் உரைத்திட இன்னிவுள்ள ரோகமெல்லாம் தீரும்.

## இளநீர் குளம்பு

ஒரு செவ்விளநீர் முகிள் திறந்து ஒரு எலுமிச்சம் பழத்திலே நாற்பது மிளகு போட்டு அடைத்து அந்த இளநீர்க்குள்ளே போட்டு குளாலே முற சீலை மண் செய்து புடம் போட்டு எடுத்து திறந்து ஆழாக்கு நீர் உள்த்திக் கொண்டு அந்த எலுமிச்சம் பழத்தில் மிளகை எடுத்து கால் பண எடை யாந்துப்பரும் இதுக்கு தேன் ஈறு பச்சை கற்பூரம் ஜீரகண்ணட 1 உட்பிர மத்திச்சு மிளகு தான் கிமேல் வைத்துக் கொண்டு நேத்திர ரோகத்துக்கு எல்லாமே தீரும்.

அரு ## நேத்திர வாய்வுக்கி

ஆவம்பட்டை, சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், எருக்கம் வேர், உவாய வேர், அமுக்கிரா வேர், ஆல்விழுது பத்திரி வேர், கிமைம் வேர் பாதிரி வேர், ஆமணக்கம் வேர் நொச்சில் வேர் திருதாளி வேர் பேராத்தை இவை வகைக்கி பலம் 20, உட்பிர யாரத்து இருபதைட்டுமாக கால் நீர் ஆட்டு துண்ணயாக காய்ச்சி இதுகள்ச்சாறு 3 உட்பிர மாத்திரம் ஆட்டு நல்லெண்ணை 3 ஆட்டு பசுவின் பால் 3 ஆட்டு காய்ந்து வருகையில் அதில் கருகு விட்ட திருப்பாவேர் சித்தரத்தை செம்பூலாச்சை அதிமதுரம் சுக்கு பாளைவேர் நற்சந்தனம் மரமஞ்சள் நன்னாரிவேர் வெள்ளாம்பிசம் வேர் கஸ்தூரி குங்குமப்பூ [illegible]

27 வகைக்கு பலம் 1, ஆட்டுப்பால் வார்த்தரைத்து அந்த
பாலில் கரைத்து ஆட்டு மூனுநாள் இளஞ்சூரி
(நாள்காலம்)
யிட்டு நல்லநாள் வடித்து 10 நாள் சூரியபுடம்
வைத்து எடுத்துத் தலைக்கு தேய்ச்சு முழுக
நேத்திர வாய்வுக்கு இருதலைவலி கபாலவலி
கபால வாய்வு கபசூல மூளை கிருமிகள் தீரும்
பத்தியமாக நடக்கவும். கை கண்டது.

நல்லெண்ணெய் 2, வெள்ளாட்டுப்
பால், நொச்சியிலை சாறு வார்த்து கைத்துச்சாறு 2,
அரத்தை சதகுப்பை மஞ்சள் கோஷ்டம் மாஞ்சி தேவ
தாரம் குங்குமப்பூ பஞ்சதிராவியம் வெட்டிவேர்
நன்னாரிவேர் சந்தனம் வகைக்கு வராகனிடை)
நொச்சிச்சாறு வார்த்தரைத்துக் கூட்டி பதத்தில்
வடித்து பயரிட்டு முழுகவும் நேத்திர வாயாதி தீரும்
பத்தியம் பாவிக்கவும்.)

கண்ணுக்கு எண்ணை

ஆ

தேங்காய்ப்பால் 2 எலும்பிச்சம்
பழச்சாறு - உரி; சாதிக்காய், பஞ்சதிராவியம்,
கிராம்பு வசுவாசி அரத்தை சீரகம் கருஞ்சீரகம்
சதகுப்பை வகைக்கு வராகனிடை! நல்லெண்ணை 2
கூட்டி பதத்தில் வடித்து முழுகவும்
தீரும் வாயாதி:
கபால வலி, கண்ணோவு சிகப்பு
எரிப்பு, நீர் பாய்ச்சல் தினவு தெறிப்பு கிருமிதீரும்.

பாண்டு காமாலை சோகைக்கு

மண்டூர பற்பம்

கிட்டம் துருசி, சோமனாதிகாயம்,
இந்துப்பு கல்லுப்பு நல்ல உப்பு வகைக்கு வராகனெடை 4
அரைபொற ௫, கடுக்காய் 20, தான்றிக்காய் 15
கடுகுரோகணி வராகனெடை 10 அசமதாகம் ௫,
வெள்ளுள்ளி உரித்த பருப்பு உள இவை நிறுத்துக்
கூட்டி கையாந்தகரை சாறு வாத்து மை போலே
அரைத்து ஆமணக்கெண்ணையால் கரைத்து காய்ச்சி
கடுகு பதத்திலிறக்கி தினம் ஒரு பாக்களவு ஒரு
நேரம் காலமே கொள்ள வயறு பேதியாம்
தூந்த தண்ணீர்விடாமல் பத்தியமாக கொள்ளவும்
பாண்டு ஊரப்பாகம் சோகை காமாலை தீரும்.
நாலக்கு குருத்தியெண்ணை பன்றி முருகவும்

இன்னமொரு விதம்

கடுக்காய் திப்பிலி கிட்டம்
காந்தம் அரைபொற இவை சமன் கூட்ட மருதம்
பட்டைச் சாற்றில் ஒரு சாமமரைத்து ஒரு சட்டியில்
வைத்து மேல் சட்டி கொண்டு காவுத்து முறசீலை
மண் செய்து செம்மிட்டு எடுத்து படமட்டு எடுத்து
அந்த சூர்ணமென கிரம மாத்திரம் கையாந்தகரை
சாற்றில் குடுக்கவும் ஊரபாகம், சோகை, காமாலை
உதுகாளை வக்கம் மகோதரம் இவை தீரும்.

## ராசப்பாகத்துக்கு கிட்ட பற்பம்

ஆ

வெகுநாள்பட்ட கிட்டம் கொண்டுவந்து பொடி பண்ணி தண்ணீர் விட்டு கழுவிப் போட்டு கோசலத்தில் முப்பது நாளிதை ஊறப்போட்டு அந்த கோசலம் வார்த்து ஒரு நாளரைத்து எடுத்து மடக்கில் வைத்து மூடி சீலைமண் செய்து ஒரு புடமிடவும் இப்படி மூனுநாள் கோசலத்தில் அரைத்து மூனு புடமிடவும் இந்த படி கையாந்தகரைச்சாறு சாரணைசாறு, கண்டங்கத்திரிச்சாறு பெரிய முள்ளிச்சாறு திரிபலைகசாயம் ஆடாதொடை இலைச்சாறு நாவல்ப்பட்டை சாறு அரசம் பட்டைச்சாறு உத்தாமணிச்சாறு நீர்முள்ளி சாறு இந்த சாறுகளிலே ஒவ்வொரு சாறு வார்த்து மூனு நாள் அரைத்து மும்மூனு புடமிட்டு இந்த பன்னிரெண்டு வகைச்சாறு வார்த்து மும்மூனு நாள் அரைத்து மூனு புடமிட்டு இந்த பன்னிரெண்டு வகை சாற்றிலும் வேறே வேறே முப்பத்தாறு நாள்

ஆ அரைத்து முப்பத்தாறு புடமிட்டு எடுத்து வைத்து கொண்டு திரிகடுகு சூரணம் பண்ணி அது ஒரு வராகனெடை இந்த கிட்ட பற்பம் ஒரு வராகனெடையும் கூட்டி இளவெந்நீரில் குழப்பி குடுக்கவும்.

தீரும் வியாதி!

பாண்டு, ராசப்பாகம், காமாலை, சோகை பெருவயறு முதலானது தீரும்.

பத்தியம் நன்றாகப் பார்க்கவும்.

## கும்பகாமாலைக்கு

பசுவின் கோமயம் நாழி, கடுக்காய்ப் பொடி பலம் ரு, சாறணைவேர் பொடி பலம் ரு, கிட்டம் பொடி வீராகனிடை 2 போட்டு காய்ச்சி லேகியம் பண்ணி குடுக்கவும். கும்பகாமாலை தீரும்.

## வயறுபேதிக்கும் பாண்டு ஊசிப்பாகம்

திரிகடுகு இருவகைச் சீரகம், சதகுப்பை, இந்துப்பு, ஏலம், வெள்ளுள்ளி, அசமதாகம், வெந்தயம் கிட்டம் அரைபொடி முத்தக்காசு, திப்பிலி மூலம், செவ்வியம், ஊமவல்லாசி, சித்திரமூலம் இவை சமன் கூட்டி பொடி பண்ணி சங்கு நொச்சில் காச்சு ஆவரசு கையாந்தகரை கீழாநெல்லி ஆகிய இந்தச் சாறுகளிலே தனித்தனியே ஒவ்வொரு நாள் சூரணத்தை நனைச்சு மத்திச்சு எடுத்து வைத்து பசுவின் நெய் தேன் இஞ்சிச்சாறு இளநீர் இதுகளிலே வெருகடிப் பிரமாணம் குடுக்கவும்.

தீரும் வியாதி :

காமாலை, பாண்டு, ஊசிப்பாகம் சயகுன்மம் வெப்பபாண்டு குடல்வாதம் வாந்தி மார்வலிக்குத்து இதுகளெல்லாமல் குணமாம்

## வேதாமாரத ரசாயனம்

அரைபொடி கழஞ்சு 4 கிட்டம் கழஞ்சு 1 கெந்தகம் கழஞ்சு ௮ இவை

கையாந்தகரை சாற்றில் ஒரு சாமமரைத்து
அவரைச்சாற்றில் ஒரு சாமமரைத்து கற்றாழை
சாற்றில் ஒரு சாமமரைத்து ஒரு உருண்டையாக
பண்ணி ஒரு நாள் சூரியபுடத்தில் வைத்து எடுத்து
அறுபது நாழிகை அம்மியாலிட்டு பொடி பண்ணி
கடுக்காய் தான்றிக்காய் நெல்லிப்பருப்பு முறைப்
பருப்பு இவைகள் சமன் கூட்டி பொடி பண்ணி
30அ அந்தப் பொடி குறை கழஞ்சும் கொடிவேலி
பொடி ஒரு கழஞ்சு கூட்டி எல்லாம் கூட்டி
புது பல்லரையில் வைத்து தினம் ரெண்டு பணவிடை
தேனில் கையாந்தகரை சாற்றிலாகுதல் கொள்ள

தீரும் வியாதி :-
சித்தபாண்டு, சூலம், பஞ்சபாண்டு,
சோகை காமாலை ஊசபாகம் இவை தீரும்
தினம் இரண்டு நேரம் ஆரோசிக்கும் பத்தியமாக
நடக்கவும்.

சித்தபாண்டுக்குத் திப்பிலி கிருதம்

திப்பிலி கழஞ்சு ௩, கிராம்பு ௩
மிளகு ௫, வெள்ளுள்ளி ௫, அசமதாகம் ௫
இவை பசுவின் பாலில் வாத்து அரைத்து நாழி
பாலில் கரைத்து நாழி பசுவின்நெய் கூட்டு
காய்ச்சி பதத்தில் வடித்து கடுகுடனே வைத்து
தினம் ஒரு கரண்டி கூட்டவும்.

தீரும் வியாதி :-
பாண்டு சோகை காமாலை மேதை
தீர்க்கும். பத்தியமாக நடக்கவும் வெள்ளிர் உட்கவும்

## உடம்புகளைந்திர

கடுகுரோகணி வராகனிடை 1, மிளகு 10, தைய்யாந்தகரைக் கொழுந்து சாறுவிட்டு அரைத்து முழுங்க எட்டு நாள் முழுங்க உடம்பு களைந்திரும்.

## காமாலைக்கு

ஆ கடுகு வழக்கட்டிரளது எருமைத் தயிரில் குடிக்க மூணு நாளையில் காமாலை தீரும்.

## கிரந்திக்கு புகை

கொட்டைப்பாசி கொண்டுவந்து காயபோட்டு இடித்து தூளாக்கிக் கொண்டு அடைப்பாலருந்து புளியந்தணல் போட்டு மூடிக் கொண்டு புகை பிடிக்க இப்படி அந்தி சந்தி நாலு மூணு நாள் பிடிக்கவும் தீரும் வாயாதி.

கிரந்தி நீர்சல்புண் கொலக்கட்டும் மத்தகிரந்து பகுங்கிரந்தும் தீரும் இதுவரை பார்த்தது கைகண்டது.

## கிரந்திபுகைச்சரக்குபுகை

ரசம் வராகனிடை 5, சாதிலிங்கம் வராகனிடை 25 குங்கிலியம் வராகனிடை 5, காசியம் வராகனிடை 5, துரிசி வராகனிடை ரு, சுத்தம் வராகனிடை 1 வெள்ளைப்பாஷாணம் வராகனிடை $, கடுகு வராகனிடை 1, கருங்

3. அ சீரகம் வராகனெடை 1, மஞ்சள் வராகனெடை 1, வெந்தயம் வராகனெடை 1, செவ்கொட்டை வராகனெடை 1, சாம்பிராணி வராகனெடை 1 இவையெல்லாம் பருத்தியிலை சாற்றிலரைத்து [illegible] உருண்டை பண்ணவும். புளியந்தணல் புகை போடவும் மூறு நாளாறு போது. புகையிட்டு முடுகி இரு புகை போட வயறு கருத்தால் பால் கஞ்சி குடுக்கவும். அடுகஞ்சி குடுத்த பிறகு புகைபோடவும் உப்பு புளி தள்ளவும்.

தீரும் வியாதி :-

இரைசல் புண்க்கும், பரங்கிப்புண், கண்டமாலை, இருக்கல் அடுகல், அரையாப்பு, பாரமயம், பவுத்திரம் வாதம், கைகால் வீக்கம் இருபுறம் வலிப்பு, நோய் கருப்பு கண் வீக்கம் இவையெல்லாமந் தீரும் கை கண்பதுலாம மூலிகையென்று சொல்லுவார்கள்.

ஆ அரையாப்புக்கு காரம்

சாதிலிங்கம் வராகனெடை 2 கொடுவேலைவேர் வராகனெடை 4 இவை முலைப்பாலில் அரைத்து வெள்ளைச் சீலையில் நனைத்து அந்தி சந்தி புளியஞ் சிராயில் புகைக்கொண்ட புண்ணு மாறும்

அரையாப்புக்கு

வெண்காரம் வராகனெடை ரூ பொரித்து ரெண்டு எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து அந்தி சந்தி மூன்று நாள் குடிக்க அரையாப்பு தீரும்.

நாகாவண்டு சுண்ணாம்பு நல்ல வெல்லமும்
கூட்டி அரைத்து பத்துப் பூச கழலை தீரும்.

உள்ளுக்கு கொடுவேலி எண்ணெய் பண்ணி
குடுக்கவும் நெய்யாகவும் குடுக்கலாம்

கன்றிப்பால் செங்கொட்டை தயலந்தடவி
அதின் மேலே கோழி முட்டை உடைந்தடவி அது
மேல் சுண்ணாம்பு தடவவும் இப்படி இரண்டு
போது தடவ பத்து வெடித்து பனை தண்ணீர்
போலே ஊறும் அது மேலே இலை போட்டு
வெந்நீர் ஊடவும் கரைச்சு போம் கைகண்டது.

32அ காயவேளை கசக்கி மாறுபாகமாக
காதில் பாய்ச்ச அரையாப்பு தீரும்

கோதும்பை அரிசிமா பலம் ௧ சீனிக்
காரம் பலம் ௧ இவை நீர் வார்த்து அரைத்து மெழுகு
பதமான உடனே காரமுள்ளுப் போலே உருட்டி
காய வைத்துக் கொண்டு அரையாப்பு முளையது
களுக்கு காரம் வைக்கவும்.

சந்தமுள்

பெருந்தேன், மெழுகு, பசுவின் நெய்
இரண்டையாலே ஊட்டு காச்சி கல்லா சூற்றி
வெள்ளைக் குங்கிலியம் பொடித்து போட்டு மறு
படி கல்தலை இடித்து இலையால் தடவி போட
சந்தப் புண்ணு மாறும்

சந்தபுண்ணுக்கும்

குன்றிப் பருப்பும் காயமும்
எருக்கம்பாலால் அரைத்து கழலை முகத்தில்
பத்து போட கரையும்.

கிரந்தி எந்த புண்ணுக்கு

சுத்தமதுருசி, கெந்தகம், உசி காந்தம், பொன்னம்பிளை வகைக்கு வராகனிடை 1 ரசம் வராகனிடை 2௲, இவை வெற்றிலைச் சாற்றில் ரெண்டு சாமம் அரைத்து தூதுவளங்காய் பிறமாணம் உருண்டை செய்து 21 உருண்டை ஆசெய்து காலமே ரெண்டு உருண்டை சாயங் காலம் ஒரு உருண்டையும் இப்படி ஏழுநாள் டப்பிலிருந்து கொள்ள எட்டாநாள் தலைமுழுக அந்தசந்தி எழுநாள் தண்ணீரிலிருக்கவும் பசுவமோர் இள வெங்காயம் உப்பு கூட்டவும் கசப்பு புளிப்பு ஆடவும்

தீரும் வியாதி :-

கிரந்தி, சூலை கருப்பு ஒழுசப்புண் இவைதீரும்.

ராமபாண புகை

ரசம் வராகனிடை 2, காரியம் பணவிடை 2, வெள்ளை பாஷாணம், துரிசி, மாஞ் கருகு, கருங்குலயம், எருக்கமங்கா இது வகைக்கு பணவிடை 1/3, அரிதாரம் பணவிடை 7 பருத்தியிலைச்சாறு விட்டு அரைத்து எரு பங்கிட்டு திரியில் முறுந்து மேரு சோறுக்கு புகைபோடவும் நாலாநாள் தலைமுழுகி ஒரு புகை போடவும் கிரந்தி சூலையுடன் குறைந்து தீரும் இது புத்திடவ் கொண்டான் புகை.

சுவடி எண்: 305. அநுபவ வைத்தியம்

ராமபாணபுகைக்குமருந்து

மொத்தபக்கங்கள்: 1-200.

33அ

அங்காளபச்சை விராகனிடை 3

கெந்தகம் விராகனிடை 4 ரூ, பச்சைநாபி
விராகனிடை 3, சாதிலிங்கம் விராகனிடை 3,
அரிதாரம் விராகனிடை 4 ரூ, தொட்டிப்
பாசாணம் விராகனிடை 3 கல்நார்பணவிடை 12,
மிருதாரசிங்கி விராகனிடை 3 வெளிக்காரம்
விராகனிடை 3, அக்கிராகாரம் விராகனிடை 3
சவுக்காரம் விராகனிடை 3, கருங்குங்கிலியம்
விராகனிடை 9, வெள்ளியம் விராகனிடை 6, மயில்
துத்தம் விராகனிடை 3 ஆக மருந்து 21க்கும்
விராகனிடை 77 உட்குறை வகை இய்யம் உருக்கி
ரசமும் முறிந்து அம்மியில் பொடி பண்ணி
வேறே வைத்து மருந்துக்கு முதல்நாள் அந்தி
பொழுது ஆடுதொடாக்கு கல்லுப்பால் ஆடுதொடாக்குத்
தண்ணீர்விட்டு ஊறவைத்து மறுநாளிந்த 19
மருந்துமந்த நீர் விட்டு மை போலே யரைத்து
பிறகு ஈயம் ரசம் கூட சேர்த்து எருக்கங்காய்
வெள்ளை சீலையில் மடிந்து வைத்து முதல்
நாள்மேல் விளக்கெண்ணெயில் தோய்முக்கி
மறுநாள் முதல் மூனு நாள் புளியந்தணலில்
அந்தி சந்தி புகை போட நாலாநாள் தலை
ஆமுழுகி நல்ல புகை போடவும் மோருஞ்சோறு
சாப்பாட்டு மான்ன (பிரம்) புகையிலிருந்து புகை
காயம் கையும் புகையில் காட்டவும்
யோனியில் ஆசனத்தில் இரணமானால்குதிப்

புகை காட்டவும் உப்புசமானால் முகம் வெளியே திரும்பாது புகையுமந்த புடனே தண்ணீர் தெளிக்கவும் மூக்காடு திறவாமல் படுத்துக் கொள்ளவும் பத்தியம் மோரும் சோறும் இள வெங்காயம் உப்பு மிளகு கூட்டவும். பிறகு 28 நாள் வெள்ளைப் உப்புக் கண்டம் கடல் சுறா திருக்கை முருங்கை காய், அவரைக் காய் அத்தல் சிறுவழுதலை காய், கண்டங்கத்திரி காய் தூதுவளைகாய் இவை எல்லாம் எண்ணெயில் தாளிச்சு கூட்டவும் நெய் பால் புளி 20 நாள் ஆகாது. குளிக்க குறுக்க குருந்த நீராக அந்தி சந்தி 7 நாள்
34. அதன்னாளிலிருக்கவும் தலைக்கு அரப்பு பயற்று முழுகவும் 48 நாள். பத்தியம் ஆடவும்.

இதுக்கு தீரும் வியாதி :

கிரயபுண், பறங்கிப்புண், அரையாப்பு, நண்டு மாலை, அழுகண்ணி, மண்டை சூலை, சூலைக்கட்டு, பவுந்திரம் கழலை ஊசும் குறாக சூலை வெடி, செவ்வெட்டை கழி, ஆணை சொறி குதிவாதம் வாத சூலை வாதகடுப்பு கபால சூலை வறள சூலை மற்றுமுண்டான ஊரணமெல்லா தீரும் கைகண்டது.

## அரையாப்பு எண்ணை

வெள்ளைச் சாரணை வேர் பலம் ௫ சதிர கள்ளிபால் உழக்கு, கடுகுரோகணி பலம் வ, சித்திரமூலம் பலம் ௫, எல்லாம் அரைத்து கரைத்து எரித்து ஒரு கரண்டி குடிக்கவும் எப்பேற்பட்ட அரையாப்பு தீரும். மூனுநாள் குடிக்கவும் உப்பு புளிநீக்கு

தருணசுர மாத்திரை

சாதிலிங்கம் அரைகளஞ்சி 2,
கருகுரோகணி அரைகளஞ்சி 4 இதுரெண்டும் இஞ்சி
குருந்தரில் அரைத்து குன்றி பிரமாணம்
மாத்திரை பண்ணி இஞ்சி சாற்றிலே தருணசுரம்
தீரும்.

கடுக்காய் கல்பம்

ஆ

கடுக்காய் 100 கொண்டு வந்து
கோமயத்திலே போட்டு 10 நாள் ஊறிச்சு எடுத்து
ரெண்டாய் வெட்டி வெரை வாங்கி போட்டு காக்கம்
திப்பிலிமூலம், சித்திரமூலம் செவியம் பஞ்சலவணம்
அசமதாகம் இதுப்போல இது சூரணம் பண்ணி
எலும்மிச்சம்பழச்சாறு இஞ்சிச்சாறு விட்டு ஊறி
மெழுகு பதத்தில் எடுத்து வச்சுக் கொண்டு காலமே
ஒரு கடுக்காய் தின்னவும்
தீரும் வியாதி :
நெஞ்சுகரிப்பு, அஜீரணத்துக்கு அக்கினி
மாந்தியம் ஆமம் பாந்தம் யாவும் தீரும்.

மூலத்துக்கு

கடுக்காய் 100 கொண்டுவந்து
பதக்கு கோமயத்தில் வேக போட்டு காயவைத்து
இடிச்சு சூரணம் பண்ணி தேனில் குடிக்கவும் மூல
ரோகம் எல்லாம் தீரும்.

சலரோக மேகத்துக்கு

சன்னலவங்கப்பட்டை, மால்
அக்கு, நல்லசுக்கு, ஆவாரம்பட்டை, சீரகம், கடுக்காய்

35. தானிக்காய், நெல்லிமுள்ளி, வகைக்குசேர் 3,
கற்றாழை மடல் சோறு இதுவெல்லாம் சேர்த்து
இடித்து ஒரு பானையிலே போட்டு நாலுமரக்கால்
தண்ணீர் விட்டு மூணு நாள் ஊறபோட்டு பொறுத்து
சாராயம் வடிக்கிற பானையிலே போட்டு சாராயம்
வடிக்கிற போலே வடிச்சு யாருங்களை தயாரித்ததை
வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும் இரண்டு
துட்டெடை குடுக்கவும் போம் வியாதி செல்ரோகம்
வெகுநாள் பட்ட மேகம் வயறு கருப்பு இதுவெல்லாம்
7 நாளையிலே குணமாம்.

மதனகாமேசுரசாயனம்

ஊசிகாந்தம் பலம் 5, சாதிக்காய்
பலம் 1, சாதிபத்திரி பலம் 1 ஆனைக்காலவேரை
சேர் 3, நிலப்பனை கிழங்கு சேர் 4, கிராம்பு பலம் 1,
சீரகம் பலம் 1, கஞ்சா வேரை பலம் 2, நீர்முள்ளி
வேரை பலம் 4, கசகசா வேரை பலம் 2 சிறு
ஆ நாகப்பூ பலம் 2, பருத்தி வேரை பலம் 2, காசுகட்டி
பலம் 1, குங்குமப்பூ பலம் ரூ, சக்கரை பலம் 5,
சுருங்கை வேரை பலம் 2, காந்தம் கொண்டுவந்து
கருநொச்சி இலைச் சாறு வாத்து அரைச்சு
அஞ்சு புடம் போட்டு அத்திப் பட்டையிலே ரெண்டு
புடம் நல்லெண்ணையிலே ரெண்டு புடம் போட்டு
ஆக பத்து புடம் குறையாமல் போட்டு சேர்த்து
சூரணித்ததையும் சேர்த்து சர்க்கரையும் சேர்த்து
குடுக்கவு லேபனம் உண்டாம் தாது புஷ்டி
உண்டாம்.

வாதத்துக்கு

நல்லெண்ணெய் நாழி முதியார
கூந்தல்ச் சாறு நாழி உள்ளி வசம்பு போட்டெரிந்து
பூசுகவும் வாதம் அசதி வாதம் இது குணமாம்.

வீரிய விருத்திக்கு மதன காமேசுரம்.

ஆனைக்காலி விரை தாமரை விரை
தண்ணீர் முட்டான் கிழங்கு தாதுவலம்பு முருங்
-கைப்பூ வகைக்கு பலம் 10 நு பால் விட்டு காய்ச்சி
பாகிந்து கொண்டு இதில் ஆனைக்காலி விரை
அதிமதுரம், திப்பிலி, கிராம்பு, கஞ்சா விரை ஏலம்,
அதிப்பலமூலம், நிலப்பனை கிழங்கு இலவம்பிசின்
நீர்முள்ளி விரை நெருஞ்சிவேர் சாதிபத்திரி
கஞ்சா வகைக்கு பலம் ௬ இடிச்சு வஸ்திரகாயம்
பண்ணி சர்க்கரை பலம் 5 கூட்டி சூடாகளறி
மூக்கவிஞ்சு கொள்ளவும். வீரிய விருத்தியுண்டு
லேபனமுண்டு சகல வியாதியும் தீரும்.

வாழைப்பாகம்.

நொச்சியிலை கருநொச்சி
சம்பந்திராய் வெள்ளருக்கு செம்பையிலை கையாந்
தகரை சங்கயிலை சாறடையிலை சாணாக்கியிலை
இவைகள் கூட்டி சாறுநாழி பிழிஞ்சு வாலக்கென்ன
